MIN ALAI

மின் அலை

October 2026 Volume : 14 Issue 10 Price Rs. 18.00/- Ann. Sub. Rs. 216/-

ஹரியானா மின் ஊழியர்களின்

வரலாற்று வெற்றி!

தொழிற்சங்கங்களின் பலத்தால் முறியடிக்கப்பட்ட தனியார்மயமாக்கல்!



40,000 தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டம்!

பிரிவு 108-ஐ பயன்படுத்தி தனியார்மயமாக்கல் உத்தரவை திரும்பப்பெறச் செய்த ஹரியானா அரசு!

தொழிற்சங்கங்களின் வெற்றி!

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

தலைவர்	பொதுச் செயலாளர்	பொதுப் பொருளாளர்
பொர்.A.அந்தோணிபடோவராஜ்	பொர்.V.S.சம்பத்குமார்	பொர்.N.R.செந்தில்

மின்வாரிய தலைவராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள
மரியாதைக்குரிய திரு ராஜேஷ் லக்கானி I.A.S அவர்களை சங்கம் வாழ்த்தி வரவேற்கிறது.





It's curtains to the Glorious and dedicated 36 years of stupendous Board service to our GS beloved Er. V.S.Sampathkumar.A simple yet fitting farewell was arranged by the Mylapore GIS SS team where our beloved GS served for exceeding 2 decades.The event was colorfully lit by presence of our CMD respected Rajesh Lakhoni sir who not only graced the occasion but also recalled the contribution of our beloved GS to not just our Sangam but the entire Board Employees and welfare of the Board.Limited Friends and Wellwishers from our Sangam and Unions attended the event.

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

Page	Contents
7	ஹரியானா மின்சார ஊழியர்கள் தனியார்மயமாக்கலை முறியடித்த வரலாறு!
9	வான்வழி கட்டுப்பாடுள்ள பகுதிகளில் உள்ள மின்பாதைகளில் ரோபோக்களின் பயன்பாடு
10	ஸ்மார்ட் மீட்டர் திட்டமும் ஸ்மார்ட் தனியார்மயமாக்கலும்!
15	கிளைச்செய்திகள்
16	Regulated Wheeling Charges மற்றும் விநியோக நிறுவனங்களின் சொத்து மதிப்பீடு வழிமுறைகள்
18	Regulatory Asset என்றால் என்ன?
19	பத்திரிக்கை செய்திகள்

TNEB ENGINEERS' SANGAM
Udangudi Building,
TNEB Complex,
144, Anna Salai,
Chennai - 600 002.
Ph : 2852 1968
No. 44, Ramasamy Garden Street,
Royapettah, Chennai - 600 014.
Ph : 2848 7517
E-mail : tnebes@yahoo.co.in
Web : www.tnebes.org

President : 9443872166
General Secretary : 9840956783
General Treasurer : 9499014992

மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 14 அக்டோபர் -2026 இதழ் 10

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!
சுயசார்பு மின் உற்பத்தியே நிரந்தரத் தீர்வு!

உணவு, உடை, இருப்பிடம் போல இன்றைய மனித வாழ்வின் நான்காவது ஆதாரத் தேவையாக மின்சாரம் மாறிவிட்டது. 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் தேவையாக இருக்கும் சூழலில், தமிழகத்தில் மின்சாரக் கொள்முதல் விலை குறித்த விவாதங்கள் மீண்டும் சூடுபிடித்துள்ளன. ஆனால், "ஏன் தமிழக மின்சார வாரியம் தனியாரிடமிருந்து காசு கொடுத்து மின்சாரத்தை வாங்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது?" என்ற அடிப்படை கேள்வி உரக்கப் பேசப்படுவதில்லை.

சுதந்திரத்திற்குப் பின் 'சுயசார்பு' மற்றும் 'தன்னிறைவு' குறித்துப் பேசிவருகிறோம். ஆனால், மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதைத் தடுக்கின்றன கொள்கைப் பிழைகளும், தனியார்மயத்திற்கு வழிவகுக்கும் மின்சாரச் சட்டங்களும்!

நிதர்சனத் தரவுகள் சொல்லும் உண்மை:

தமிழகத்தின் தினசரி மின் தேவை: 22,000 MW
மின்சார வாரியத்தின் சொந்த உற்பத்தி: 8,500 MW மட்டுமே!
மத்திய அரசுத் தொகுப்பு: 7,000 MW
மீதமுள்ள பெரும்பகுதி: தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயம்.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக வட சென்னை அனல் மின் திட்டம் 3, உடன்குடியைத் தவிர வேறு எந்தவொரு பெரிய புதிய மின் உற்பத்தியும் தமிழக மின் தொகுப்பில் சேரவில்லை. காடம்பாறை, குந்தா நீரேற்று நிலையம், கொல்லிமலை நீர் மின் திட்டம் எனப் பல திட்டங்கள் அரைகுறையாக நிற்கின்றன. உள்ளபடியே, நம்மிடம் உள்ள அனல் மின் நிலையங்கள் கூட 60% திறனில்தான் இயங்குகின்றன. ஆண்டுக்கு 6% மின் தேவை அதிகரிக்கும் சூழலில், இன்று ஒரு புதிய மின்நிலையம் அமைக்கத் தொடங்கினாலும் உற்பத்தி வர 5 ஆண்டுகள் ஆகும்.

இந்தச் சூழலில், தூத்துக்குடியில் பயன்பாட்டில் உள்ள 1,050 MW (5x210 MW) நிலக்கரி அலகுகளுக்குப் பதிலாக, 20,800 கோடி மதிப்பில் PPP (பொது–தனியார் பங்களிப்பு) முறையில் 1,600 MW 'சூப்பர் கிரிட்டிகல்' அனல் மின்நிலையம் அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அண்மையில் 300 கோடி செலவில் சீரமைக்கப்பட்ட பழைய அலகுகளை, புதிய திட்டம் பயன்பாட்டுக்கு வரும் முன்பே மூடுவது மின் உற்பத்தியைக் கடுமையாகப் பாதிக்கும். இதனால் ஏற்படும் 1,050 MW பற்றாக்குறையை ஈடுசெய்ய மீண்டும் வெளிச்சந்தையில் தனியாரிடமே அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்க வேண்டிய சூழல் உருவாகும்.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்." (குறள் 475)

அளவுக்கு மீறினால் மயிலிறகும் வண்டியின் அச்சு முறிந்து போகும். ஏற்கனவே நிதி நெருக்கடியில் உள்ள மின்சார வாரியம், திட்டமிடப்படாத இத்தகைய முடிவுகளால் மேலும் கடனில் மூழ்கும்.

தொழிற்சங்கத்தின் உடனடி தீர்வுக்கான முன்வடிவுகள்:

திறனை முழுமையாக்குதல்: இயங்கி வரும் அனல் மின் நிலையங்களின் உற்பத்தியை உடனடியாக 100% ஆக உயர்த்த வேண்டும்.

பணிகளை விரைவுபடுத்துதல்: பாதியில் நிற்கும் அனல்/புனல் மின் நிலையக் கட்டுமானங்களை போர்க்கால அடிப்படையில் ஓரிரு ஆண்டுகளில் முடித்து உற்பத்தியைத் தொடங்க வேண்டும்.

மின் காரணி (Power Factor) மேம்பாடு: 110KV மற்றும் 33KV துணை மின்நிலையங்களில் Capacitor Banks நிறுவி மின் காரணியை சீரமைக்க வேண்டும். Power Factor 0.5% உயர்ந்தால் கூட, அது புதிய மின் உற்பத்திக்குச் சமமான பலனைத் தரும்!

புதிய திட்ட அமைப்பு: தூத்துக்குடியில் அறிவிக்கப்பட்டுள்ள 1,600 MW புதிய அனல் மின் நிலையத்தை, தற்போதுள்ள 5 அலகுகளின் இயக்கத்தைப் பாதிக்காத வகையில் தனியாக அமைக்க வேண்டும்.

பேட்டரி சேமிப்பு கட்டமைப்பு (BESS): நமது சொந்த துணை மின் நிலையங்களில் உள்ள காலியிடங்களில் "Battery Storage System" சொந்தமாக நிறுவிட வேண்டும்.

ஹைபிரிட் கட்டமைப்பு: புதுப்பிக்கத்தக்க எரிசக்தியுடன் (Hybrid) இணைந்து செயல்படும் வகையில் மின்கட்டமைப்பைத் நவீனப்படுத்த வேண்டும்.

தனியார்மயப் பொறியில் சிக்கி மின்சார வாரியத்தையும் தமிழக மக்களையும் பலிகடா ஆக்காமல், சொந்த மின் உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு அடைவதே மின்வெட்டு, மின்கட்டண உயர்வு மற்றும் கொள்முதல் சர்ச்சைகளுக்கு ஒரே தீர்வு!

தமிழக அரசும் மின்சார வாரியமும் பொதுத்துறையைப் பாதுகாக்குமா?

பொதுச்செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே,

வணக்கம்.

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவ மழை துவங்கியுள்ள நிலையில், காலநிலை மாறுதல்களால் குறுகிய நேரத்தில் அதிகளவு மழைபொழிவு அவ்வப்போது எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏற்படும் இடர்பாடுகளின் போதும், மழைக்கால விநியோகப்பணிகளின் போதும் மிகுந்த எச்சரிக்கையுடனும், உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடனும் பணியாற்றிட வேண்டுகிறேன்.

தமிழ்நாடு மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழுவின் முறையீட்டின் மீது பேச்சுவார்த்தைக்கு 28.09.2026 அன்று அழைப்பு விடுக்கப்பட்டது. பேச்சு வார்த்தையில் வாரியத்தலைவர் அவர்கள், FTE முறையில் பணிநியமனத்தை அரசின் அறிவுறுத்தலின்படி தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகவும், கணக்கீட்டாளர்கள் பற்றாக்குறையை உடனடியாக போக்கிடவும், (மீட்டர் ரீடிங்) கணக்கீட்டு பணிகளின் குளறுபடிகளை சரி செய்திட ஏதுவாக, ஆறு மாதகாலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கணக்கிட்டுப் பணிகளை மேற்கொள்ள டெண்டர் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள். மேலும் ஸ்மார்ட் மீட்டர் மாற்றும் திட்டங்கள் 2023 முதலே தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தற்போது டெண்டர் நிலைக்கு வந்திருப்பதாகவும் அதில் எவ்விதமாற்றமும் செய்ய இயலாது எனவும் தெரிவித்தார்கள்.

மேலும் FSFS பணப்பயன், பணிக்கொடை 20 லட்சத்திலிருந்து 25 லட்சம் ஆகிய கோரிக்கைகளுக்கு விரைவில் அரசிடமிருந்து ஒப்புதல்பெற நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து 06.10.2026 அன்று அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் அடுத்தகட்ட திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 07.10.2026 அன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகளில் உள்ள மின் இணைப்புகளுக்கும் TOTEX முறையில் ஸ்மார்ட் மீட்டர் பொறுத்திட மின்னணு ஒப்பந்த புள்ளிகள் (டெண்டர்) கோரப்பட்டுள்ளது.

இதனால் கூட்டு நடவடிக்கை குழுவின் அவசரக் கூட்டம் 08.10.2026 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்கண்டவாறு விழிப்புணர்வு மற்றும் கண்டன முழக்கங்கள் ஆர்ப்பாட்டங்கள் மூலம் நமது எதிர்ப்பினை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

1. 12.10.2026, 13.10.2026, 14.10.2026 தேதிகளில் அனைத்து கோட்ட அலுவலகங்கள் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம்.
2. 13.10.2026 அன்று சென்னை மின்வாரிய தலைமையகம் முன்பு மாலை 5:20 மணியளவில் சென்னை கிளைகளின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்.
3. 15.10.2026 அன்று அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்
4. 26.10.2026 முதல் 31.10.2026 வரை அனைத்து வட்டங்களிலும் மக்கள் சந்திப்பு இயக்கம்.

கோரிக்கைகள்

1. மின்வாரியம் அறிவித்துள்ள ஸ்மார்ட் மீட்டர் டெண்டர் உத்தரவினை திரும்ப வலியுறுத்தல்
2. மின் உற்பத்தி திட்டங்கள், மின் வழித்தட திட்டங்களை PPP முறையில் தனியார் மயமாக்கும் முயற்சியை கைவிடுதல்

3. 5 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் (Fixed term employment) பணிநியமன முறையை திரும்பப்பெற வலியுறுத்தல்
4. அரசு ஊழியர்களுக்கு இணையாக மின்வாரிய பணியாளர்களுக்கும் பணிக்கொடை உச்சவரம்பினை 20 லட்சத்திலிருந்து 25 லட்சமாக உயர்த்தி வழங்குதல்
5. அரசு ஊழியர்களுக்கு இணையாக, குடும்ப நலநிதி பயனை 3 லட்சத்திலிருந்து 5 லட்சமாக 01.09.2021 முதல் முன்தேதியிட்டு வழங்குதல்
6. வாரிய ஆணை2, நாள் 12.04.2022 ஐ ரத்து செய்தல்

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகமெங்கும் அனைத்து வட்டங்களிலும் பெருந்திரளான பணியாளர்களும் பொறியாளர்களும் கண்டன ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டு வலுவான எதிர்ப்பினை பதிவு செய்துள்ளனர்.

ஸ்மார்ட் மீட்டர் திட்டங்கள் மற்றும் மின் உற்பத்தி, மின் வழித்தட திட்டங்களின் தனியார்மய நடவடிக்கைகளின் காரணமாக ஏற்படவிருக்கும் பாதிப்புகளையும், மறைமுக கட்டண உயர்வு வாய்ப்புகளையும் பொதுமக்களிடமும் அனைத்து நுகர்வோர்களிடமும் கொண்டு சேர்ப்பது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

நமது தொடர் உரையீடுகளின் பயனாக 243 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலை பொறியாளர், இரண்டாம் நிலை / மின்னியல் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்றுள்ள அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேம்.

தொடர்ந்து முறையீடு செய்யப்பட்டு, நீண்டகாலமாக நிலுவையிலிருந்து வந்த இளநிலை பொறியாளர் / மின்னியல் முதல் நிலை பதவி உயர்வுக்கு கடந்த 07.10.2026 அன்று தகுதியான 1067 பொறியாளர்களின் தகுதிக்காண் அறிக்கைகள் call for செய்யப்பட்டுள்ளது. நமது தொடர் முறையீடுகளை ஏற்று கணிசமாக மிகுதியான எண்ணிக்கையிலே பதவி உயர்வுக்கு call for செய்திட்ட பணியமைப்பு நிர்வாகத்திற்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். (Crucial date 25.03.2026) தகவல்களை அனுப்புவதற்கு இறுதி தேதி 23.10.2026 கிளைப் பொறுப்பாளர்கள் தகவல்கள் குறித்த நேரத்தில் தலைமையகத்திற்கு அனுப்பப்படுவதை உறுதி செய்திடவும் மைய அமைப்பிற்கு தெரிவிக்கவும் வேண்டுகிறேன்.

இந்தப்பதவி உயர்வு call for நடவடிக்கைகளை தொடர்ந்து, மதுரை உயர்நீதிமன்ற கிளையில் இளநிலை பொறியாளர்/மின்னியல் இரண்டாம் நிலை முன்னுரிமை சம்பந்தமாக தனிநபர்கள் மற்றும் பட்டயம் அல்லாத இளநிலைப் பொறியாளர்கள் சார்பில் தொடரப்பட்டு, நீண்டகாலமாக நிலுவையிலிருந்த 19 வழக்குகளும் கடந்த 07.10.2026 அன்று விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு வாதங்கள் நிறைவு பெற்றுள்ளது.

16.10.2026 அன்று, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (TNERC) புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களையும், TNERC–இன் உறுப்பினரான திரு. ஏ.ஆர். மஸ்கரனஸ் அவர்களையும் தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கத்தின் சார்பில் நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

நமது வாரியத் தலைவர் திரு.அருண்ராய், I.A.S அவர்கள் மாற்றம் செய்யப்பட்டு, நமது முன்னாள் வாரியத் தலைவர் திரு.ராஜேஷ் லக்காணி, I.A.S அவர்கள் மீண்டும் வாரியத் தலைவராக கடந்த 12.10.2026 அன்று பணியேற்பு செய்துள்ளார்கள். வாரியத் தலைவரை சங்கத்தின் சார்பில் நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

பதவி உயர்வில் முறைப்படியாக பொறுப்பேற்றுள்ள, இயக்குனர் (விநியோகம்) Er.L.லீனா அவர்களை சங்கத்தின் சார்பில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

துவக்கநிலைபதவிகளின் காலி இடங்களை நிரப்பிட தொடர்ந்து முறையீடு செய்யப்பட்டு வந்ததை தொடர்ந்து, TNPSC மூலம் தேர்வு செய்யப்பட்ட 583 நபர்களுக்கு 17.10.2026 அன்று தொழில்நுட்ப உதவியாளர் / மின் நேரடி நியமனத்திற்கான உத்தரவு / வட்டஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம் என்பது வாரியத்திற்கு புத்துணர்ச்சி பாய்ச்சியது போல் உணரப்படுகிறது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும் பொறியாளர் சங்கத்தின் சார்பில் வாரியத்திற்கு வரவேற்கும் விதமாக வாழ்த்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கிளைப் பொறுப்பாளர்களின் தொடர்பு தகவல்களை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியேற்பு செய்யும் வரை தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிட கிளைச் செயலாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அனைவரையும் பொறியாளர் சங்கத்தில் ஆயுள்கால உறுப்பினர்களாக இணைத்திடவும், பொறியாளர் சங்க செயல்பாடுகளுக்கு வலுசேர்த்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள வாரிய தலைவருடனான சந்திப்பின்போது, உதவி செயற்பொறியாளர் பதவிஉயர்வில் இடமாற்றம் (modification) வேண்டி விண்ணப்பித்த பொருத்தமான, தகுதியான நபர்களுக்கு மாறுதல் உத்தரவுகள் வழங்கிட கேட்டுக் கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து மருத்துவ

காரணங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறப்பு காரணங்கள் அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

வாரிய தலைவருடனான சந்திப்பின்போது, தற்போதைய சூழலில் மின் சீரமைப்பு பணிகளுக்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

கடந்த 16.10.2026 அன்று தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களைச்சந்தித்து

- தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம்
- நிலுவையிலுள்ள விருப்ப ஊர்மாறுதல் விண்ணப்பங்கள் மீது உத்தரவுகள்
- நிலுவையிலுள்ள உதவி செயற்பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வுகள்
- நிலுவையிலுள்ள Redesignation மின்னியல்கள் மீது உரிய உத்தரவுகள்
- உதவி செயற்பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வு நடவடிக்கைகளை விரைந்து முடித்து பதவி உயர்வு வழங்கிட
- இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் முதல் நிலை பதவி உயர்வு Call for
- இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் இரண்டாம் நிலை பதவி உயர்வு விரைவாகவழங்கிட

ஆகியவை குறித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் தொடர் முயற்சியால் 23.10.2026 அன்று 96 உதவிப் பொறியாளர்கள் (Aes) மற்றும் 32 இளநிலைப் பொறியாளர்கள் (Jes) உட்பட 128 நபர்களுக்கு உதவி செயற்பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வுப் பட்டியல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ஹரியானாவில் எலவன் பவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தனியார் மின் விநியோக உரிமத்தை எதிர்த்து, 40,000–க்கும் மேற்பட்ட மின் ஊழியர்களும் பொறியாளர்களும் மேற்கொண்ட 48 மணி நேரக் கட்டுக்கோப்பான ஒன்றுபட்ட போராட்டம் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. தொழிற்சங்கங்களின் அசைக்க முடியாத பலத்தின் எதிரொலியாக, அவசரக் களநிலவரங்களைக் கருத்திற்கொண்டு, மாநில அரசு உடனடியாக பிரிவு 108–ஐப் பயன்படுத்தி தனியார் மயமாக்கல் உத்தரவைத் திரும்பப்பெறச் செய்துள்ளது. நமது ஒற்றுமையும் உறுதியும் மட்டுமே பொதுத்துறையைப் பாதுகாக்கும் என்ற உண்மையை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம் மீண்டும் நிரூபித்துள்ளது!

கடந்த 07.09.2026 அன்று எனக்கு ஏற்பட்ட தீ விபத்திலிருந்து, கடவுள் அருளாலும், தங்கள் அனைவரின் பிரார்தனையினாலும், எனது உடல் நிலையில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. கடந்த 30.09.2026 அன்று மின்வாரிய பணியில் இருந்து வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளேன். தொடர்ந்து ஒரு சிலவாரங்களில் முழுமையாக என்னை சங்கபணியில் ஈடுபடுத்தி கொள்ள முடியும். என்னால் முழுமையாக சங்க பாணியாற்ற முடியாத தற்பொழுதைய சூழலில், இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திவரும் பொதுப் பொருளாளர் உள்ளிட்ட தலைமையக மைய பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி,

பொர்.V.S.சம்பத்குமார்,
பொதுச் செயலாளர்



தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தீப ஒளியில் இருள் விலகட்டும்,
தித்திக்கும் மகிழ்ச்சி இல்லம் நிறைக்கட்டும்,
அன்பும் அமைதியும் அகத்தில் மலரட்டும்,
அனைவர் வாழ்விலும்
ஆனந்தத் தீபாவளி பிறக்கட்டும்!



பொறியாளர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை பொறியாளர் சங்கம் தெரிவித்துக்கொள்கிறது.

ஹரியானா மின்சார ஊழியர்கள் ஒன்று சேர்ந்து தனியார்மயமாக்கலை முறியடித்த வரலாறு!

அக்டோபர் 21 போராட்டம் முதல் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரிவு 108 அமலாக்கம் வரை: 40,000 தொழிலாளர்களின் கட்டுக்கோப்பான ஒற்றுமை, மாநிலத்தின் லாபகரமான மின் விநியோகப் பகுதிகளைத் தனியார்மயமாக்கும் முயற்சியை அரசைக் கொண்டே முறியடிக்கச் செய்தது.

மின்துறையில் ஒரு "கறுப்பு உத்தரவு":

2026 அக்டோபர் 21 அன்று, ஹரியானாவின் மின்சாரத் துறை ஒரு பெரிய கொள்கை ரீதியான கருப்பு உத்தரவினை எதிர்கொண்டது. சுனில் சச்தேவாவை தலைவராகக் கொண்ட எலவன் பவர் (Eleven Power Pvt Ltd) என்ற தனியார் நிறுவனத்திற்கு 25 ஆண்டுகால இணையான மின் விநியோக உரிமத்தை (Parallel Power Distribution Licence) வழங்கி, ஹரியானா மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (HERC) உத்தரவிட்டது.

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 14–ன் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் ₹4,716 கோடி முதலீடு செய்து, குருகிராம் மற்றும் நூஹ் ஆகிய முக்கிய தொழில் மற்றும் வணிக மையங்களில் தனியாக ஒரு மின்விநியோக வலையமைப்பை உருவாக்க எலவன்பவர் திட்டமிட்டது. நிலுவையில் உள்ள புதிய மின் இணைப்பு விண்ணப்பங்களை விரைவாக வழங்கி, 8.3 லட்சத்திற்கும் அதிகமான நுகர்வோர் அரசு நிறுவனமான DHBVN அல்லது தனியார் நிறுவனம் எனஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை இது வழங்கும் என்று HERC இந்த முடிவை நியாயப்படுத்தியது.

ஆனால், ஹரியானா மின்சாரத் துறையின் களப்பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு இந்த உத்தரவு தங்களின் வாழ்வாதாரத்திற்கும், பொது மக்கள் சேவைக்கும் வந்த பேரபாயமாகத் தெரிந்தது.

"இது ஒரு கறுப்பு உத்தரவு — குறுக்கு வழியில் மின்சாரத் துறையைத் தனியார்மயமாக்கும் சதி," என்று ஹரியானா பிஜ்லிகரம்சாரி மற்றும் பொறியாளர்கள் சன்யுக்த் சங்கர்ஷ் மோர்ச்சா அமைப்பின் செய்தித் தொடர்பாளர் பல்ஜித் பெனிவால் கொதித்தார். "குருகிராம் மற்றும் நூஹ் போன்ற அதிக வருவாய் ஈட்டும் பகுதிகளை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தால், அது அரசுக்குச் சொந்தமான DHBVN நிறுவனத்தைப் பலவீனப்படுத்தும். இதனால் ஏழை எளிய மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய மின்சாரம் கடுமையாகப் பாதிக்கப்படும்."

40,000 தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டம்:

தொழிற்சங்கங்களின் தரப்பிலிருந்து எதிர்ப்பு மிக வேகமாகவும் உறுதியாகவும் வெளிப்பட்டது. கர்னாலில் நடந்த அவசரக் கூட்டத்திற்குப் பிறகு, அகில ஹரியானா பவர் கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கத் தலைவர் சுரேஷ் ரதிமற்றும் இணைப் போராட்டக் குழுவினர் (மோர்ச்சா) உடனடி எச்சரிக்கை விடுத்தனர்: உரிமத்தை ரத்து செய், இல்லையெனில் மாநிலமே இருளில் மூழ்கும்!

அகில இந்திய மின்சார பட்டய பொறியாளர்கள் கூட்டமைப்பு (AIFOPDE) மற்றும் அதன் மாநில அமைப்பான ஹரியானா மாநில மின்சார வாரிய (HSEB) பட்டய பொறியாளர்கள் சங்கம் இணைந்து, பொதுச் செயலாளர் பொறியாளர், அபிமன்யு தங்கர் (Er. AbhimanyuDhankar) அவர்களின் தலைமையில், இணை மின் விநியோகஉரிமம் (Parallel Electricity Distribution Licence) வழங்குவதற்கு எதிரான போராட்டத்தில் ஒரு முக்கியபங்காற்றியது.

அக்டோபர் 21 அன்று, மாநிலம் முழுவதும் உள்ள 300–க்கும் மேற்பட்ட மின்சாரத் துணைப் பிரிவுகளில் HERC வழங்கிய உத்தரவு நகல்களை ஊழியர்கள் தீயிட்டு கொளுத்தினர். மாவட்டத் தலைமையகங்களில் மத்திய மின்சாரத் துறை அமைச்சர் மனோகர் லால் கட்டார், முதலமைச்சர் நயாப்சிங் சைனிமற்றும் HERC தலைவர் முகேஷ் கார்க் ஆகியோரின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன.

அக்டோபர் 22 அன்று, 40,000–க்கும் மேற்பட்ட பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், லைன்மேன்கள் மற்றும் நிர்வாக ஊழியர்கள் 3 நாள் மாநிலம் தழுவிய வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர்.

மின் விநியோகத் தடங்கலும் பாதிப்புகளும்:

வேலை நிறுத்தத்தின் இரண்டாவது நாளில், மாநிலத்தின், குருகிராம், பரிதாபாத், நூஹ், பல்வால், குருக்ஷேத்ரா, கைத்தால்உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது:

காவல் துறையைக் கொண்டு நிலைமையைக் கட்டுப்படுத்த முயன்றாலும், முறையான தொழில்நுட்பப் பணியாளர்கள் இல்லாமல் ஒரு மாநிலத்தின் மின் வலையமைப்பை இயக்க முடியாது என்பதை அரசு உணர்ந்தது.

திருப்புமுனை: பிரிவு 108–ஐப் பயன்படுத்திய அரசு:

கள நிலவரத்தின் தீவிரத்தைப் புரிந்துகொண்ட மின்சாரத் துறை அமைச்சர் அனில் விஜ்மற்றும் முதலமைச்சர் நயாப்சிங் சைனிஆகியோர், தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தனர். ஏற்கனவே HERC விசாரணையின் போதே அரசு நிறுவனம் (DHBVN) சார்பில் மூத்த வழக்கறிஞர்களை வைத்து இந்தத் தனியார் உரிமத்தை எதிர்த்ததாகக் குறிப்பிட்ட அரசு, உடனடியாக இரண்டு முக்கிய சட்ட நடவடிக்கைகளை எடுத்தது:

நீதிமன்ற மேல்முறையீடு: HERC உத்தரவுக்கு எதிராக மின்சாரத்திற்கான மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் (APTEL) உடனடியாக மேல்முறையீடு செய்வது.

பிரிவு 108 அமலாக்கம்: பொது நலன் கருதி, சுயாட்சி பெற்ற ஒழுங்குமுறை ஆணையத்திற்கு (HERC) நேரடியாகக் கட்டுப்படுத்தும் உத்தரவுகளைப் பிறப்பிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கும் 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 108–ஐ (Section 108) அமல்படுத்துவது.

பேச்சுவார்த்தையில் கிடைத்த முழு வெற்றி:

அக்டோபர் 23 பிற்பகல் 3:00 மணிக்கு, முதலமைச்சர் நயாப்சிங் சைனிமற்றும் அமைச்சர் அனில் விஜ் ஆகியோர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் சண்டிகரில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

அக்கூட்டத்தில், எலவன் பவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யக் கோரி HERC–க்கு பிரிவு 108–ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. மேலும், "ஹரியானாவில் மின்சாரத் துறை ஒருபோதும் தனியார்மயமாக்கப்படாது" என்று முதலமைச்சர் நயாப்சிங் சைனி உறுதியளித்தார்.

அரசின் உறுதியானசட்டநடவடிக்கையைத் தொடர்ந்து, போராட்டக் குழு (மோர்ச்சை) வேலைநிறுத்தத்தை உடனடியாகக் திரும்பப் பெற்றது. அடுத்த சில மணி நேரங்களிலேயே ஊழியர்கள் பணிக்குத் திரும்பி மாநிலம் முழுவதும் மின் விநியோகத்தைச் சீரமைத்தனர்.

தொழிற்சங்கவரலாற்றில் ஒரு மைல்கல்:

ஹரியானா மின்சாரஊழியர்களின் இந்த வெற்றி, இந்தியத் தொழிற்சங்கஇயக்கத்தில் ஒரு மிகமுக்கியமான திருப்புமுனையாகக் கருதப்படுகிறது:

ஒழுங்குமுறை ஆணையங்களின் எல்லை: சுயாட்சி அதிகாரம் கொண்ட அமைப்புகளாக இருந்தாலும், தொழிலாளர்களின் உரிமைகளையும் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலையையும் பாதிக்கக்கூடிய முடிவுகளைத் தன்னிச்சையாக எடுக்க முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது.

பிரிவு 108 என்ற சட்டஆயுதம்: பொதுமக்களின் நலனுக்கும் அரசு நிறுவனங்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் வரும்போது, அரசு தன் சட்டப்பூர்வஅதிகாரத்தைப்பயன்படுத்தித் தவறான முடிவுகளைத் தடுக்க முடியும் என்பது வெளிப்படையாகியுள்ளது.

தொழிலாளர்களின் ஒற்றுமை: பொறியாளர்கள் முதல் களப்பணியாளர்கள் வரை அனைவரும் ஒன்றுபட்டு நின்றதால், ஒரு மாநிலஅரசேதனது கொள்கை முடிவை மாற்றி, தனியார்மயமாக்கல் முயற்சியைக் கைவிட நேரிட்டது.

முனைவர்.S.சம்பத்
மாநில அமைப்பு செயலாளர் / பொறியாளர் சங்கம்
தென் மண்டல தலைவர் / AIFOPDE

பணி நிறைவு பாராட்டு.. !

சங்கத்தின் பொதுச்செயலாளர்...
சம்பத்குமார் பணி நிறைவு இன்று... !
காலம் எல்லாம் உழைப்பை தந்தீர்... !
களங்கம் இன்றி கடமை செய்தீர்... !
சங்கம் போற்ற பணிகள் செய்தீர்...
நாளும் எங்கள் நெஞ்சில் நின்றீர்... !
செயலால் பதவி உயர்வுகளை பெற்றீர்...!
சோதனை உடைத்து சங்கத்தில் சாதனை
செய்தீர்...!
சங்கத்தின் தூணாய் வரமாய் அமைந்தீர்...!
மூத்தோர் வழியில் சங்கம் வளர்த்தீர்..!
வாரியப் பணியில் இறுதியில் கூட. .
காலனை வென்று காவியம் செய்தீர்....!
சங்கப் பொதுச் செயலாளருக்கு
இன்று வாரிய பணி நிறைவு...!?
ஆனால்-
சங்கப் பணிக்கு அல்ல....!?
பணி நிறைவு காலம் முழுதும்...
இன்னலின்றி இன்பமாய் இருந்திட ...!
இறை நிலை நின்று வாழ்த்துகிறோம்....!
வாழிய உன் சாதனை...!
வாழிய உன் புகழ்....!
வாழிய பொறியாளர் சங்கம்...

– முனைவர்.சா.சம்பத்
மா. அ .செயலாளர், பொறியாளர் சங்கம்.

காமதேனு

அவன் போன பின் இருளில் நிற்கும்
அந்த சிறு குடும்பம்
கண்ணீரில் மிதக்கையில் - தோள் கொடுக்க
காமதேனு வருகிறது...
இது பணம் அல்ல - இது
உடன் பணி செய்தவனின் கண்ணீர் துடைப்பு
ஒரு பொறியாளன் இன்னொரு
பொறியாளனுக்கு
இறுதியாய் செய்யும் சத்தியம்
"நீ இல்லை என்றாலும்
உன் குடும்பம் தனியில்லை
நீ ஏற்றிய விளக்கு அணையாது
நாங்கள் இருக்கிறோம்"
காமதேனு என்பது நிதியல்ல
மனிதம் இன்னும் உயிரோடு இருக்கிறது என்பதன்
சாட்சி"

– மதன்ஜோசப்

இதுவரை இணையாத அனைவரும்
KBF-VI–ல் இணைவோம்.

வான்வழி கட்டுப்பாடுள்ள பகுதிகளில் உள்ள மின்பாதைகளில் ரோபோக்களின் பயன்பாடு

குன்மிங், யுன்னான் — ஜூன் 2026–ல் நடைபெறவுள்ள, நாட்டின் மிக முக்கியமான தேசிய கல்லூரி நுழைவுத் தேர்வான காவோகாவோவின் போது மின்சார விநியோகத்தைப் பாதுகாப்பதற்காக, குன்மிங்கில் உள்ள மின் விநியோகக் கம்பிகளில் பாம்பு வடிவ ஆய்வு ரோபோக்களை சீனா பயன்படுத்தியுள்ளது. குன்மிங்கின் குவாண்டு மாவட்டத்தின் மின் விநியோகப் பணியகத்தால் உருவாக்கப்பட்ட இந்த ரோபோ சாதனங்கள், மின்சாரம் பாயும் கம்பிகளில் சுழன்று சென்று, கோளாறுகளைக் கண்டறிந்து, தேர்வு நடைபெறும் இடங்களுக்குத் தடையற்ற மின்சாரம் கிடைப்பதை உறுதிசெய்தன.

ரோபோக்களின் பணிகள்

பாம்பு போன்ற இந்த இயந்திரங்கள் மின் கம்பிகளைச் சுற்றி வளைத்து, உடைந்த கம்பிகள், தேய்ந்த பாகங்கள் மற்றும் அசாதாரண வெப்பநிலை உள்ளிட்ட அபாயங்களைக் கண்டறிய ஆய்வு செய்கின்றன. இதை உருவாக்கியவரின் கூற்றுப்படி, விமான நிலையங்களின் பறக்கத் தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ள தேர்வு மையங்களுக்குச் சேவை செய்யும் 130கி.மீ (81 மைல்கள்)க்கும் அதிகமான மின் விநியோக உள்கட்டமைப்பை இந்த ரோபோக்கள் ஆய்வு செய்துள்ளன. வழக்கமான மனித ஆய்வு குழுக்களை விட இந்த ரோபோக்கள் மூன்று மடங்கு அதிக செயல்திறன் கொண்டவை என்று பணியகம் தெரிவித்துள்ளது.

வழக்கமான முறைகள் ஏன் போதுமானதாக இல்லை?

மனிதர்களால் செய்யப்படும் மின் கம்பி ஆய்வு அதிக உழைப்பு தேவைப்படும், உடல் ரீதியாக கடினமானது மற்றும் அடிக்கடி ஆபத்தானது. இதே போன்ற பயன்பாட்டுச் சோதனைகளுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் வான்வழி ட்ரோன்களால், பறக்கத் தடை செய்யப்பட்ட பகுதிகளில் செயல்பட முடியாது. மேலும், அவை உயர் மின்னழுத்த மின்காந்தக் குறுக்கீடுகளால் பாதிக்கப்படக்கூடியவை. இது கட்டுப்பாட்டு சமிக்ஞைகளையும் படத் தரத்தையும் சீர்குலைக்கிறது. ட்ரோன்கள், குறைந்த பேட்டரி ஆயுள் மற்றும் மோசமான வானிலை போன்ற கட்டுப்பாடுகளையும் எதிர்கொள்கின்றன. இதனால், முக்கியமான உள்கட்டமைப்பு வழித்தடங்களுக்கு அவை நம்பகத்தன்மையற்றவையாகின்றன.

காவோகாவோ தொடர்பு

காவோகாவோ என்பது சீனாவின் மிக முக்கியமான வருடாந்திர நிகழ்வுகளில் ஒன்றாகும். இதில், நாடு முழுவதும் மில்லியன் கணக்கான மாணவர்கள் ஒரே நேரத்தில் தேர்வெழுதுகின்றனர். தேர்வு நடைபெறும் இடத்தில் ஏற்படும் எந்தவொரு மின்சாரத் தடையும் குறிப்பிடத்தக்க சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான சைனா சதர்ன் பவர் கிரிட்டின் ஒரு பிரிவான குன்மிங் மின்சார விநியோகப் பணியகம், செவ்வாயன்று சமூக ஊடகங்களில், 'தேர்வு நடைபெறும் இடங்களுக்கு நிலையான மற்றும் சீரான மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்காக, மின்சார நிறுவனப் பணியாளர்கள் கண்டறியப்பட்ட அபாயங்களைக் கண்காணித்து உடனடியாகச் சரிசெய்தனர்' என்று கூறியது.

கிரிட் ரோபோட்டிக்ஸில் பரந்த போக்கு

இந்த வரிசைப்படுத்தல், சீனாவின் அரசுப் பயன்பாட்டுத் துறையில், அபாயகரமான ஆய்வுப் பணிகளைத் தானியக்கமாக்குவதற்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட ரோபோக்களைப் பயன்படுத்தும் ஒரு பரந்த முயற்சியைப் பிரதிபலிக்கிறது. பல்வேறு மாகாணங்களில் துணை மின்நிலைய ரோந்துப் பணிகள் மற்றும் கோபுர ஆய்வுகளுக்காக ரோபோ நாய்களும் வான்வழி ட்ரோன்களும் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், மின் கம்பியுடன் நேரடித் தொடர்பு தேவைப்படும் மற்றும் வான்வெளி கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் மின்சாரம் பாயும் விநியோகப் பாதைகளில், பாம்பு வடிவ ரோபோக்கள் ஒரு தனித்துவமான நன்மையை வழங்குகின்றன.

அடுத்து என்ன?

அதிகபட்ச தேவை நேரங்கள் மற்றும் தேசிய நிகழ்வுகளின் போது நம்பகத்தன்மையை நிலைநிறுத்த மின் கட்டமைப்பு இயக்குநர்கள் அதிகரித்து வரும் அழுத்தத்தை எதிர்கொள்வதால், ஐந்து தெற்கு மாகாணங்களை உள்ளடக்கிய சைனா சதர்ன் பவர் கிரிட்டின் சேவைப் பகுதி முழுவதும் ரோபோ ஆய்வுத் தளங்களின் கொள்முதல் துரிதப்படுத்தப்பட வாய்ப்புள்ளது. குன்மிங் நிறுவலில் இருந்து சேகரிக்கப்பட்ட செயல்திறன் தரவுகள், எதிர்கால உயர் முன்னுரிமை ஆய்வுச் சுழற்சிகள் மற்றும் முக்கிய பொது நிகழ்வுகளுக்கு முன்னதாக, பரந்த அளவிலான அறிமுகங்களுக்கு வழிகாட்டக்கூடும்.

ஸ்மார்ட் மீட்டர் திட்டமும் ஸ்மார்ட் தனியார்மயமாக்கலும்!

ஸ்மார்ட் மீட்டர் திட்டம் என்பது தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் மின் கணக்கீடு மற்றும் வசூல் பிரிவை முதல் கட்டமாகத் தனியார்மயமாக்கும் முயற்சியாகும்.

தமிழ்நாட்டில் மின்சார வாரியம் சார்பில் ஸ்மார்ட் மீட்டர் (Smart Meter) திட்டம் கொண்டுவரப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள 12 மண்டலங்களிலும் இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் (Tenders) கோரப்பட்டுள்ளன.

ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தில் பல்வேறு முக்கிய அம்சங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அதனைக் கொண்டுவரும் விதம் மிகவும் ஆபத்தானது.

இப்பணி TOTEX (Total Expenditure) முறைப்படி தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுவதால், இது மின்வாரியத்தைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கையாகும். எனவே, ஸ்மார்ட் மீட்டர் திட்ட டெண்டரை ரத்து செய்ய வலியுறுத்தி, தமிழ்நாடு மின்வாரியத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறது.

இந்த TOTEX முறையில் ஸ்மார்ட் மீட்டர் அமைப்பது Capital Expenditure (CAPEX – மூலதனச் செலவு) மற்றும் Operational Expenditure (OPEX – செயல்பாட்டுச் செலவு) ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது. இதன் மூலம் மீட்டர் வாங்குதல், பொருத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் என அனைத்தையும் ஒரு தனியார் நிறுவனமே (PPP முறை) கவனித்துக்கொள்ளும். இந்தச் சேவைக்கான கட்டணத்தைத் தவணை முறையில் தனியார் நிறுவனத்திற்கு வாரியம் வழங்க வேண்டும்.

ஏற்கெனவே கடன் சுமையில் உள்ள மின்சார வாரியம் மேலும் கடனுக்குள்ளாகும். வாரியத்தில் ஆட்குறைப்பு, பதவிகள் ரத்து, K2 முறையில் பணியாளர்கள் என மெல்ல மெல்ல வாரியம் மறைமுகமாகத் தனியார் வசம் சென்றுகொண்டிருக்கும் நிலையில், மின்வாரியத்தின் ஒரு பகுதியை இந்தத் திட்டம் நேரடியாகவே தனியாருக்குத் தாரை வார்க்கும்.

மேலும், மின் உற்பத்தி மற்றும் மின் வழித்தடங்களைத் தனியாருக்கு வழங்குவது நமது (மக்களின்) சொந்தச் சொத்துக்களை அடகு வைப்பது போல் ஆகும். இது மிகப்பெரிய மின் கட்டமைப்பில் நிரந்தரமின்மையை உருவாக்கிவிடும். இந்தத் திட்டங்கள் வாரியத்தில் பணிபுரியும் அனைவரையும் பாதிப்பதோடு, பொதுமக்களையும் பாதிக்கும்.

எனவேதான், நமது மற்ற தொடர் கோரிக்கைகளுடன் இந்த இரண்டு பிரதான கோரிக்கைகளையும் வலியுறுத்தி, கூட்டுக்குழு தொடர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கிறது. பொறியாளர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுக்குழு முடிவின்படி ஆர்ப்பாட்டங்களிலும் கூட்டுக்குழுவின் நடவடிக்கைகளிலும் தவறாமல் பங்கேற்போம். கோரிக்கைகளை வென்றெடுப்போம்!

நன்றி!

– முனைவர் சா. சம்பத்
மாநில அமைப்புச் செயலாளர் / பொறியாளர் சங்கம்

வாழ்த்துப் பாமாலை

மின்மிகு தமிழகம் மேன்மை பெறவே,
மெய்வரு உழைப்பினர் தோள்கள் உயரவே,
பொன்னெனும் பணிவாய்ப்புப் பூத்திடும்நாளில்,
போற்றுவோம் அனைவரும் புதுவெற்றிவேளில்!
அறமெனும்ஆணிவேர்ஆழப்பதித்து,
அன்பெனும் நன்னீர் நாளும் தெளித்து,
உரிமையும் நலனுமே உயிரெனக்காக்கும்,
பொறியாளர் சங்கமே!
உன்னைப்போற்றுவோம்!
சங்கம் என்பது பெயரன்று -
சாற்றரும் பேரரண்!
சங்கம் என்பது அணியன்று -
உரிமையின் பெரும்படை!
தனியொரு குரலுக்குத் துணையென நின்று,
தளர்வுறும் நெஞ்சிற்குத் தன்னம்பிக்கை தந்து,
பணியினில் மாண்பையும், உறுப்பினர்
நலனையும், பாரினில் நிலைநிறுத்தும் பண்புடைச்
சங்கமே!
தமிழக அரசின் அரும்பெரும் வாய்ப்பால்,
தகுதியின் உழைப்பால், தன்மதிப்பின் சான்றால்,
ஐந்நூற்று எண்பத்து மூன்று மணிகள்
அணியென மிளிர்கின்றீர் - வாழ்கநும்
வாழ்வுகள்!

மின்னியல் துறையில் மிளிர்ந்திடவந்தீர்,
மின்வாரியப்பணியில் மேன்மைகள் தருவீர்;
கற்றகல்வியும் பெற்ற திறனும்
கடமை வழியிலே கனிந்திட வேண்டும்!
மின்சாரம் பாயும் பொறியமைப்புகளில்,
மின்னியல் நுட்பத்தின் செயல்பாடுகளில்,
ஒவ்வொரு பணியும் உயிரெனக்கருதி,
ஒழுங்குடன் செயலாற்றி உயர்ந்திடுவீரே!
சங்கத்தின் நிழலில் உரிமைகள் தழைக்க,
சார்ந்திடும் தோழமைச் செல்வங்கள் பெருக,
நலன்களும் வாய்ப்புகளும் நாள் தொறும்
சிறக்க, நல்லிணக்க ஒற்றுமை நானிலம்போற்ற!
இளையோர் வரவினால் இயக்கம் வலுப்பெற,
இனியவர் இணைவினால் இலட்சியம் நிறைவேற,
புதியவர் ஒவ்வொருவரும் பெருமிதம் கொள்ள,
பொறுப்புடன் வாழ்வினில் பொற்காலம் காண்க!
வாழ்க பொறியாளர் சங்கம்!
வளர்க பொறியாளர் ஒற்றுமை!!

- பாலசுப்ரமணியன்
BS / TTPS.

SANGAM – THE SAFE HEAVEN OF TECHNICAL ASSISTANTS

A dream doesn't become reality through magic; it takes sweat, determination and hard work. — *Colin Powell*

TNEB Engineers' Sangam Wholeheartedly Congratulates and Welcomes each one of the 583 Engineers who have been selected as Technical Assistant / Electrical to serve the esteemed Organisation – The Tamilnadu Electricity Board.

It is a dream come true moment for not just you but your family too. We know how much you all have toiled hard, day in and day out to reach this coveted position. Being a fresher with a Degree or Diploma in Engineering is going to add color to this esteemed organisation which is marching in its Platinum Jubilee gloriously. Also it is glad to note that some of you carry forward the experience you have gained in various fields.

Technical Assistant post is one of the vital posts in the Board consisting of Generation, Transmission and Distribution companies catering the need of the General Public and the Industries. You all should be proud to be one as you are going to play a significant role by acting as a link between categories.

Recruitment of Technical Assistant was never given on a silver platter rather a result of determination, hard work and perseverance of a team which is 60 years old. This team of success baptized as TNEB Engineers' Sangam is the savior of this category protecting it throughout these 6 decades shielding them from attacks from various quarters and also bringing success and progress for its members' career.

TNEB Engineers' Sangam consists mostly of Diploma Engineers and also Degree Engineers with Diploma qualification. Yet, of late mere Degree Engineers too have joined this organisation adding significance wherein they are playing a crucial role at various levels in numerous Branches which reflects the functioning of this organisation.

One thing which is certain and cause of envy is, TNEB Engineers' Sangam carries its member in its heart and soul striving hard for their career progression akin to a mother who carries a child in her womb for 10 months. The reason for its success is because of its Office Bearers, who are selfless in character and who always fight for their members' rights.

Yet another significance of TNEB Engineers' Sangam is, it equally cares about the welfare of the Board and its wellbeing like the way it cares for its members and their career progression which is a rarest quality and hard to find among Unions. Hence our Sangam is going to be the safe haven for you all.


Welcome you all to the Board and our Sangam the place where you belong.

- Er. A. Anthony Padovaraj, President / TNEBES

தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நமது கிளைச் சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிதழும் கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



தஞ்சாவூர்



தஞ்சாவூர்



விருதுநகர்



விருதுநகர்



தஞ்சாவூர்



கரூர்



விருதுநகர்



நாகை



வேலூர்



கோபி

உ

Arulmigu Sri Kondalamman Thunai Sri Ramajayam Arulmigu Sri Patchaivaliyamman Thunai

Wedding Reception

Er. V. Kondalraj M.E., MBA., PGDCA., MISTE.,
EE / Enforcement / Vigilance Cell, TNEB (Rtd)
Honorary President - Tamilnadu Govt. Polytechnic Alumi Association
Former Secretary Administration / TNEB Engineers' Sangam
Mrs. Sumathi Kondalraj M.Sc., B.Ed., M.Phil.,
BT Asst. Maths / Govt. School
&
Dr. S. Balachandran FRCS
Senior Consultant Orthopaedic Surgeon
Mrs. Barady Balachandran MBA

We cordially solicit your gracious presence and blessing with family and friends on the auspicious occasion of the wedding reception of our children

Sowbhagyavathi.



Dr. Sobana Kondalraj Ms (General Surgery)
&
Chiranjeevi.



Dr. Ramkamal Balachandran Ms (General Surgery)
(Senior Resident - Pondicherry Institute of Medical Science Hospital)

On Sunday the 15th November 2026 between 11.00 am and 2.00 pm

at AKNK Palace, Alagarkovil Main Road, Poigaikaraipatti, Madurai
(4 km Before Arulmigu Kallazhagar Temple)

With Best Compliments from
Skyview Power Solutions (Solar)
Madurai & Chennai
(Authorised kirloskar Solar Distributors)
No.1 Position in PM Suriyaghar Scheme in South Tamilnadu
Mob: 75 4886 4886 / 75 4886 7776
web : skyviewsolar.co.in

Sangam wishes the couple successful happy married life

Er. V. Kondalraj M.E., MBA., PGDCA., MISTE., EE / Enforcement / Vigilance Cell, TNEB (Rtd) has Contributed Rs.10001/- towards Min Alai Donation, Thanks.

கிளைச் செய்திகள்

விருதுநகர் கிளை

27–08–2026 அன்று தொழிற்சங்க பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுக்குழு கூட்டம் (ULJC) விருதுநகர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் 9 தொழிற்சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கிளை செயலாளர் விருதுநகர் அவர்கள் பொறியாளர் சங்கத்தின் சார்பில் கலந்துகொண்டு 5 கோரிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

திருச்சி கிளை

திருச்சி மின் பகிர்மான வட்டத்தின் யூனிட் அளவிலான கூட்டுக்குழு (ULJC) கூட்டம், 21.09.2026 பிற்பகல் 03:00 மணிக்கு, மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொறியாளர் சங்கம் உள்ளிட்ட 9 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பொறியாளர் சங்கத்தின் சார்பாக அதன் திருச்சி கிளைச் செயலாளர் இக்கூட்டத்தில் பங்கேற்று, 6 கோரிக்கைகளை முன்வைத்தார்.

திருநெல்வேலி கிளை

திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தின் யூனிட் அளவிலான கூட்டுக்குழு (ULJC) கூட்டம், 03.10.26 அன்று மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொறியாளர் சங்கம் உள்ளிட்ட 9 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பொறியாளர் சங்கத்தின் சார்பாக திருநெல்வேலி கிளைச் செயலாளர் இக்கூட்டத்தில் பங்கேற்று, 15 கோரிக்கைகளை முன்வைத்தார்.

திருவாரூர் கிளை

08.10.2026 அன்று திருவாரூர் கிளையின் மேற்பார்வை பொறியாளர் உடனான திட்டமிட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலுவையில் இருந்த ஏழு பிரதான கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

சங்கம் தரப்பில்	வாரியதரப்பில்
1. பொறி. பி. சரவணகுமார் – கிளைத் தலைவர்	1. மேற்பார்வை பொறியாளர்/திருவாரூர்
2. டாக்டர் எஸ். சம்பத் – கிளைச் செயலாளர்	2. உதவிச் செயற் பொறியாளர் (பொருள் மேலாண்மை), திருவாரூர்
3. பொறியாளர் எம். பாஸ்கர் – கிளைப் பொருளாளர்	3. முதுநிலை மேலாளர் / தகவல் தொழில்நுட்பம் (IT)
4. பொறியாளர் கே. கண்ணன் – பொதுக் குழு உறுப்பினர்	

திருச்சி மண்டலம்

22.10.26 தலைமை பொறியாளர்/ பகிர்மானம் /திருச்சி அவர்களையும் முதுநிலை நிர்வாக அலுவலர்/ திருச்சி அவர்களையும் செயற்பொறியாளர்/ மின்னியல், செயற்பொறியாளர்/ திட்டங்கள் அவர்களையும் பொறியாளர் சங்கத்தின், திருச்சி மண்டலம் சார்பில் மரியாதை நிமித்தமாக சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.மேலும் இந்த சந்திப்பின் போது விநியோக பிரிவில் தற்போது உள்ள இடர்பாடுகள் பற்றியும் நிர்வாகம் சம்மந்தமான குறைகளும் எடுத்துரைக்கப்பட்டது. தலைமை பொறியாளர் அவர்கள் நமது கோரிக்கைகளை பரிசீலனை செய்வதாக உறுதி அளித்தார். இந்த சந்திப்பில் மண்டல செயலாளர்/ திருச்சி , கிளை செயலாளர்/ திருச்சி, கிளை செயலாளர்/ திண்டுக்கல், கிளை செயலாளர் புதுக்கோட்டை, மற்றும் கிளை பொறுப்பாளர்கள், கிளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கோபி கிளை

தேசிய தன்னார்வ இரத்ததான தினம் 01.10.2026 அன்று கோபிசெட்டிபாளையதில் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் போது ஒவ்வொரு ஆண்டும் இரத்ததான முகாம்களை ஒருங்கிணைத்து நடத்தி வரும் தன்னார்வலராக தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம் கோபி கிளை மாவட்ட ஆட்சியர் அவர்களால் கௌரவிக்கப்பட்டது.

கரூர் கிளை

தேசிய தன்னார்வ இரத்ததான தினம் 14.10.2026 அன்று கரூர் அரசு மருத்துவமனையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் போது ஒவ்வொரு ஆண்டும் இரத்ததான முகாம்களை ஒருங்கிணைத்து நடத்தி வரும் தன்னார்வலராக தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம் கரூர் கிளை கௌரவிக்கப்பட்டது.

விருதுநகர் கிளை

தேசிய தன்னார்வ இரத்ததான தினம் 15.10.2026 அன்று விருதுநகர் அரசு மருத்துவமனையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் போது ஒவ்வொரு ஆண்டும் இரத்ததான முகாம்களை ஒருங்கிணைத்து நடத்தி வரும் தன்னார்வலராக தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம் விருதுநகர் கிளை மாவட்ட ஆட்சியர் அவர்களால் கௌரவிக்கப்பட்டது.

தஞ்சை கிளை

தேசிய தன்னார்வ இரத்ததான தினம் 16.10.2026 அன்று தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் போது ஒவ்வொரு ஆண்டும் இரத்ததான முகாம்களை ஒருங்கிணைத்து நடத்தி வரும் தன்னார்வலராக தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம் தஞ்சாவூர் கிளை மாவட்ட ஆட்சியர் அவர்களால் கௌரவிக்கப்பட்டது.

வேலூர் கிளை

தேசிய தன்னார்வ இரத்ததான தினம் 15.10.2026 அன்று வேலூர் அரசு மருத்துவமனையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் போது ஒவ்வொரு ஆண்டும் இரத்ததான முகாம்களை ஒருங்கிணைத்து நடத்தி வரும் தன்னார்வலராக தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கௌரவிக்கப்பட்டது.

நாகை கிளை

தேசிய தன்னார்வ இரத்ததான தினம் 26.10.2026 அன்று மயிலாடுதுறை மாவட்ட இரத்தவங்கியில் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் போது ஒவ்வொரு ஆண்டும் இரத்ததான முகாம்களை ஒருங்கிணைத்து நடத்தி வரும் தன்னார்வலராக தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களால் கௌரவிக்கப்பட்டது.

மேற்கண்ட நிகழ்வுகளில் சான்றிதழும் நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. கிளைப் பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

Regulated Wheeling Charges மற்றும் விநியோக நிறுவனங்களின் சொத்து மதிப்பீடு வழிமுறைகள் (Book Value vs Market Value)

TNERC (தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்) tariff நிர்ணயத்திற்கு historical cost / book value–ஐ மட்டுமே பயன்படுத்துகிறது. Market value அல்லது Ind AS revaluation–ஐ ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அதற்கு முக்கிய காரணம், மின்வாரிய சொத்துகள், ஏற்கனவே நுகர்வோர் கட்டணங்கள் மூலம் நிதியளிக்கப்பட்டவை எனவும், சந்தை மதிப்பை கொண்டு மறு மதிப்பீடு செய்துஉயர்ந்த மதிப்பை ஏற்றால், depreciation மற்றும் return அதிகரித்து மின் நுகர்வோருக்கான கட்டணம் உயரும் என கூறுகிறது. எனவே நுகர்வோர் பாதுகாப்புக்காக book value மட்டுமே கணக்கில் எடுக்கப்படுவதை வழக்கமாக கொண்டுள்ளது.

Ind AS அறிமுகத்தால், நிதி அறிக்கைகளில் சொத்து மதிப்பு, depreciation, regulatory assets ஆகியவை மாறுகின்றன. ஆனால் TNERC மற்றும் பிற SERC–கள் tariff-க்கு historical cost–ஐத் தொடர்ந்து பயன்படுத்துகின்றன. இதனால் நிதி அறிக்கைக்கும், tariff கணக்கீட்டிற்கும் வேறுபாடு ஏற்படுகிறது. உதாரணமாக ஹரியானா மாநில மின்சாரத் துறைசொத்து மதிப்பீடு 1998–99–ல் HSEB unbundling செய்யப்பட்டபோது CAG அறிக்கைப்படி சொத்துகள் undervalued ஆக மாற்றப்பட்டன என்றும் HVPNL–க்கு மாற்றப்பட்ட சொத்துகளின் மதிப்பு மதிப்பீட்டாளர் மதிப்பீட்டை விட குறைவாக இருந்தது (சுமார் ₹1,037.90 கோடி வேறுபாடு) என சொல்லப்படுகிறது.

முழுமையான தனியார்மயமாக்கல் நடைபெறவில்லை என்றாலும் UHBVNL மற்றும் DHBVNL ஆகிய விநியோக நிறுவனங்கள் இன்றும் அரசு நிறுவனங்களாகவே உள்ளன. ஆனால், Eleven Power Private Limited என்ற ஜூன் 2025–ல் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஹரியானாவின் Gurugram மற்றும் Nuh மாவட்டங்களுக்கு parallel distributionlicense கோரி HERC–ல் Petition No. 30 of 2026 மனு செய்து, தற்போது விநியோக உரிமையையும் பெற்றுள்ளது.

இந்நிறுவனத்தால் முன்மொழியப்பட்ட முதலீடு சுமார் ₹4,717 கோடி. இந்நிறுவனம், regulated wheeling charges மட்டும் செலுத்தி, அதே கட்டமைப்பைப் பயன்படுத்தலாம். Regulated Wheeling Charges என்பது இந்திய மின்சாரத் துறையில் மிக முக்கியமான கருத்து. எளிய விளக்கம் Wheeling என்றால் ஒருவரின் மின்சாரத்தை மற்றொருவரின் வலையமைப்பு (poles, lines, transformers, cables) வழியாக கொண்டு செல்வது.

Regulated Wheeling Charges என்பது அந்த வலையமைப்பைப் பயன்படுத்துவதற்காக செலுத்தப்படும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட (regulated) கட்டணம். இதை மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (SERC) அல்லது மத்திய ஆணையம் (CERC) நிர்ணயிக்கிறது. Open Access – 1 MW–க்கு மேல் உள்ள உயர் மின்னழுத்த நுகர்வோர், தங்கள் மின்சாரத்தை DISCOM அல்லாத generator–இடமிருந்து வாங்கும்போதும், புதிய விநியோக உரிமதாரர் (புதிய DISCOM) தற்போதைய DISCOM–ன் வலையமைப்பைப் பயன்படுத்தி மின்சாரம் விநியோகிக்கும் போதும் மற்றும் Captive power அல்லது renewable energy projects–ல் மின்சாரத்தை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பும்போதும் இக்கட்டணம் வசூலிக்கலாம். Electricity (Amendment) Rules, 2024–ன்படி,

$$\text{Wheeling Charge} = \frac{\text{Annual Revenue Requirement (ARR) towards wheeling}}{\text{Energy wheeled during the year}}$$

இங்கு ARR–ல் network maintenance, depreciation, operation & maintenance expenses, return on equity போன்றவை அடங்கும். Voltage level (HT/LT), மாநிலம், மற்றும் renewable energy–க்கு உள்ள சலுகைகளின் அடிப்படையில் இது மாறுபடும். பொதுவாக Wheeling Charge ₹0.30 முதல் ₹1.20 / kWh வரை வேறுபடும்.

Network owner (தற்போதைய DISCOM) இந்த Wheeling Charge கட்டணத்தை கொண்டே தனது வலையமைப்பை பராமரிக்கிறார். இதனால் புதிய நிறுவனங்கள் சொந்த poles, lines உருவாக்காமல் போட்டியிட முடியும் (infrastructure duplication தவிர்க்கப்படுகிறது). கூடுதலாக Cross-Subsidy Surcharge மற்றும் Additional Surcharge ஆகியவை குறித்து இன்னும் தகவல்கள் இல்லை.

சுருக்கமாக: Regulated Wheeling Charges = மின்சார வலையமைப்பைப் பயன்படுத்துவதற்கான "வாடகை" கட்டணம். இதை ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்து, நியாயமாகவும் வெளிப்படையாகவும் வசூலிக்கவேண்டும். Regulated Wheeling Charges என்பது DISCOM–ன் Wheeling Business ARR (Annual Revenue Requirement) அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இந்த ARR–ல் முக்கிய கூறுகள்:

Depreciation — Distribution network-¡ Gross Fixed Assets (GFA) / capital cost அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

Return on Equity (RoE) அல்லது Return on Capital Employed — Regulated asset base (பொதுவாக Net Fixed Assets = GFA கழித்தல் Accumulated Depreciation) அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

Network assets தொடர்பான கடன்களுக்கான வட்டி.

Operation & Maintenance (O&M) செலவுகள் (பெரும்பாலும் GFA–யுடன் தொடர்புடையவை).

பிற network தொடர்பான செலவுகள்.

தற்போது Gross Fixed Assets–ன் முக்கியதுவத்தை நாம் உணரலாம். Asset Valuation உடன் தொடர்புடைய SERC–கள் (TNERC, MERC, HERC உட்பட) பயன்படுத்தும் asset base எப்போதும் historical cost / book value / Commission ஏற்றுக்கொண்ட original capital cost ஆகும்.

தற்போதைய market value அல்லது replacement cost அல்ல. Regulators revaluation–களை (Ind AS அல்லது Transfer Scheme–ல் செய்யப்பட்டவை உட்பட) ஏற்பதில்லை. ஏனெனில், உயர்ந்த asset value → அதிக depreciation + அதிக RoE → அதிக wheeling charges → Open-access பயனர்கள் அல்லது parallel licensees–க்கு அதிக செலவு, இறுதியில் retail tariff–ல் அழுத்தம் ஏற்படுத்தும்.

Book Value பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவு DISCOM சொத்துகள் பழைய book value–ல் (இன்றைய market/replacement value–ஐ விட மிகக் குறைவாக) இருந்தால்: Depreciation தொகை குறைவாக இருக்கும். Return on equity சிறிய base–ல் கணக்கிடப்படும். எனவே wheeling charges ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கும்.

இதனால் Open-access நுகர்வோர், Parallel distribution licensees (தற்போதைய network–ஐப் பயன்படுத்த இந்த charges செலுத்துபவர்கள்) ஒட்டுமொத்த நுகர்வோர் (network costs மிதமாக இருப்பதால்) பயனடைவார்கள். ஆனால், அரசு மின் வினியோக நிறுவனம் தனது network assets–ன் உண்மையான தற்போதைய மதிப்பின் மீது, குறைவான "பொருளாதார" வருமானத்தை மட்டுமே பெறும்.

Regulators asset base–க்கு historical/book value–ஐ வலியுறுத்துவதால் (market value–க்கு பதிலாக), கிடைக்கும் regulated wheeling charges market value பயன்படுத்தினால் கிடைக்கும் அளவை விட குறைவாகவே இருக்கும். மின்சார வாரியங்கள் பிரிக்கப்பட்ட நேரத்தில், புதிய நிறுவனங்கள் தொடக்கத்திலேயே பெரும் நஷ்டத்துடனும், கடன்பாடுகளுடனும் (Liabilities) இயங்கக் கூடாது என்பதற்காக, சொத்துகளின் மதிப்பு வேண்டுமென்றே குறைத்துக் கணக்கிடப்பட்டதாகப் பொருளாதார வல்லுநர்கள் தரப்பில் கூறப்பட்டது. எனினும், இது கணக்கியல் விதிகளுக்குப் புறம்பானது என்றும், இதன் மூலம் அரசாங்கத்தின் பொதுச் சொத்துகளின் மதிப்பு மறைக்கப்பட்டுள்ளது என்றும் CAG மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தது.

இந்தத் தணிக்கை அறிக்கை, மின்சாரத் துறை சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துகள் எவ்வாறு குறைத்து மதிப்பிடப்படுகின்றன என்பதற்கு ஒரு முக்கிய உதாரணமாகப் பாராளுமன்றத்திலும், மாநில சட்டமன்றத்திலும் விவாதிக்கப்பட்டது. இது நுகர்வோரைப் பாதுகாக்கவும், போட்டி/open access–ஐ ஊக்குவிக்கவும் வேண்டுமென்றே எடுக்கப்பட்ட கொள்கை முடிவு என்றே நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், குறைவான வருமானத்தை கொண்டு நெட்வொர்க்கை தொடர்ந்து பராமரிக்க இயலுமா என்பதை ஒழுங்குமுறை ஆணையங்கள் உணருமா? மக்களின் வரிப்பணத்தில் பொதுத்துறை நிறுவனங்களால் கடந்த 80 ஆண்டுகளில் உருவக்கப்பட்ட தற்போதைய மின் பகிர்மான நெட்வொர்க்கை சொற்ப வாடகைக்கு கொடுத்துவிட்டு, அசலையும் இழக்கப்போகிறோமா என்பதை காலம் தான் தீர்மானிக்கவேண்டும்.

Regulatory Asset என்றால் என்ன?

Regulatory Asset என்பது மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (SERC / TNERC) உருவாக்கும் ஒத்திவைக்கப்பட்ட வருவாய் இடைவெளி (Deferred Revenue Gap). அதாவது, TNPDCL போன்றவை மின்சாரம் விநியோகம் செய்யும்போது ஏற்படும் உண்மையான செலவுகளுக்கும், நுகர்வோரிடமிருந்து வசூலிக்கும் கட்டணம் + அரசு மானியம் மூலம் கிடைக்கும் வருவாய்க்கும் இடையே உள்ள நஷ்டம் / இடைவெளி.

இந்த இடைவெளியை உடனடியாக நுகர்வோர் மீது கட்டண உயர்வாக சுமத்தாமல், ஆணையம் அதை எதிர்காலத்தில் வசூலிக்க அனுமதிக்கும் உரிமையாக அங்கீகரிக்கிறது. இதையே Regulatory Asset என்கிறோம். DISCOM–ன் Average Cost of Supply (ACS) > Annual Revenue Requirement (ARR) / வசூல் ஆகும்போது, அதாவது, ஒரு யூனிட் மின்சாரம் கொடுக்க ₹7.20 செலவு; ஆனால் கட்டணம் + மானியம் மூலம் ₹7.00 மட்டுமே கிடைத்தால், ₹0.20 இடைவெளி என கணக்கிட்டு, இதை Regulatory Asset ஆக பதிவு செய்கிறார்கள்.

இதனால், நுகர்வோருக்கு திடீர் கட்டண உயர்வு (Tariff Shock) ஏற்படாமல் பாதுகாக்கவும், தற்காலிகமாக DISCOM–ன் நிதிச் சுமையைக் குறைக்கவும், பின்னர் படிப்படியாக (சில ஆண்டுகளில்) கட்டணம் அல்லது பிற வழிகளில் வசூலிக்கவும் இந்த நிவாரணம் மின்சார விநியோக நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இது intangible asset (உருவமற்ற சொத்து) மற்றும் எதிர்காலத்தில் பணம் வசூலிக்கும் உரிமையை வழங்குகிறது.

பொதுவாக carrying cost (வட்டி) உடன் வசூலிக்கப்படும். ஆனால் நீண்டகாலம் குவிந்தால் DISCOM–ன் நிதிநிலை மோசமாகி, வட்டிச் சுமை அதிகரிக்கும். எனவே, உச்ச நீதிமன்றம் ஏற்கனவே உள்ள Regulatory Assets களை அதிகபட்சம் 4 ஆண்டுகளில் தீர்க்கவும், புதியவைகளை 3 ஆண்டுகளில் தீர்க்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், TNERC True-up Order-ல் (FY 2023–24) FY 2023–24 இடைவெளியை புதிய Regulatory Asset ஆக உருவாக்கவில்லை. பழைய இடைவெளிகளை அரசு ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

ஏப்ரல் 1, 2024 வரை உள்ள மொத்த Regulatory Asset ரூ.83,000/– கோடி என கணக்கிடப்பட்டு, அவை TANGEDCO -வின் பின்வரும் நிறுவங்களான TNPDCL -க்கு ரூ.59,038.14 கோடி TNPGCL-க்கு ரூ.22,110.16 கோடி மற்றும் TNGECL-க்கு ரூ.1851.718 கோடி என மூன்று நிறுவனங்களுக்கும் பிரித்தளிக்கப்பட்டுள்ளன.

Writ Petition (Civil) No. 104 of 2014 (BSES Rajdhani Power Ltd. vs. Delhi Electricity Regulatory Commission) ல் 06.08.2025 தேதியிடப்பட்ட உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, இந்த Regulatory Assets–ஐ மார்ச் 2031க்குள் முழுமையாக தீர்க்க வேண்டும். இதனால் ஆண்டுக்கு சுமார் ₹11,800 கோடிகூடுதல் சுமை ஏற்படும் என்று தமிழக அரசு வெளியிட்ட White Paper கூறுகிறது. இது தமிழ்நாடு அரசின் மீதான சுமையை அதிகரிக்கும்; மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB) தனது செயல்பாடுகளுக்கு பெருமளவிற்கு அரசின் மானிய உதவியைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும்.

பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 30.09.2026 அன்று வாரிய பணியில் இருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல் நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. Er. **V.S.SAMPATHKUMAR**, AEE / Shift / 230 KV GIS SS / Mylapore, General Secretary, Chennai Central Branch. 9840956783
2. Er. **D.GOPINATH**, AEE / Shift / 230 KV SS / Koyambedu, Former GCM / Chennai West, Chennai West Branch. 9444968263
3. Er. **C.MURUGESAN**, AEE / Shift / 230 KV SS / Sempatty, Former Org. Secy. / Dindigul, Dindigul Branch. 7010324175
4. Er. **A.JAYALAKSHMI**, EE / Electrical, O/o CE / D / Thiruvannamalai, Thiruvannamalai Branch. 9444990473
5. Er. **C.R.MANOKARAN**, AEE / Shift / 400 / 230 KV SS / Taramani, Chennai South Branch. 9677056045
6. Er. **P.BALASUBRAMANIAN**, AEE / Lines / Kayathar, Tirunelveli Branch. 7339695603
7. Er. **K.SIVAKUMAR**, AEE / Mtce. / 230 KV SS / Poothamedu, Villupuram Branch. 9825902555
8. Er. **I.ANTHONY PAULRAJ**, AEE. NI / Mech. / ICHP / TTPS, TTPS Branch. 9894262498

பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கிறது கேரளா

கொச்சி: "பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி, அதில் இருந்தும், குப்பைகளில் இருந்தும் மின்சாரம் தயாரிப்பதற்கான முன் மாதிரி ஆலைகள், அடுத்த இரண்டு ஆண்டுகளில் கேரளாவில் அமைக்கப்படும்," என, அம்மாநில முதல்வர் சதீசன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் காங்கிரசை சேர்ந்த முதல்வர் சதீசன் தலைமையில், ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது. இங்கு, 'நிர்மலம்: தூய்மையான கேரளாவின் புதிய சகாப்தம்' என்ற பெயரிலான ஐந்து ஆண்டு திட்டத்தை, மாநில அரசு முன்னெடுத்துள்ளது.

இந்த திட்டத்தை முதல்வர் சதீசன், கொச்சியில் நேற்று தொடங்கி வைத்து பேசியதாவது: பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்கு இரண்டு அல்லது மூன்று முன்மாதிரி ஆலைகளும், சாதாரண கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்க நான்கு அல்லது ஐந்து முன்மாதிரி ஆலைகளும் அமைக்கப்படும். அடுத்த ஓரிரு ஆண்டுகளில் இந்த ஆலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நிர்மலம் திட்டத்தின் மூலம், 2031, மார்ச் 30க்குள் கேரளா குப்பையில்லா மாநிலமாக மாறும். இவ்வாறு அவர் பேசினார்.

நன்றி : தினமலர் (03.10.2026)

மின்சார சேவை 'வாட்ஸாப்பில்' 94987 94987 எண்ணில் புகாரளிக்கலாம்

சென்னை: தமிழகத்தில் மின்சார சேவை தொடர்பாக, புகார்களை மக்கள் எளிதாக பதிவு செய்து, விரைவாக அதிகாரிகளிடம் தெரிவிக்க, 'வாட்ஸாப் டி.என்.இ.பி., சாட்போட்' வசதியை, மின் வாரியம் தொடங்கியுள்ளது.

அதன் அறிக்கை: பொது மக்களுக்கு தடையற்ற மற்றும் சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு தேவையான, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், மின்சார வினியோகம் உள்ளிட்ட சேவைகள் குறித்த புகார்களை எளிதாக அளிப்பதற்கு, உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையின் அடுத்த கட்டமாக, மின்சார சேவைகள் குறித்து புகார்களை விரைவாக கையாளவும், அவற்றை உரிய அதிகாரிகளிடம் காலதாமதமின்றி கொண்டு சேர்த்து, குறித்த காலத்தில் தீர்வு வழங்கவும், 24 மணி நேரமும் செயல்படும், 'டி.என்.இ.பி., சாட்போட்' எனும் புதிய வசதி உருவாக்கப்பட்டு உள்ளது.

இந்த சேவையை பெற, 'வாட்ஸாப்' செயலியில், 94987 94987 என்ற எண்ணிற்கு, 'ஹாய்' என, பதிவிட வேண்டும். இதையடுத்து, மொபைல் போன் எண் அல்லது மின் இணைப்பு எண் வாயிலாக, புகார் குறித்த விபரங்கள் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, உடனடியாக அனுப்பப்பட்டு, புகாரை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் வாயிலாக, மக்கள் எளிதாகவும், விரைவாகவும் மின்சார சேவைகளை பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நன்றி தினமலர் (02.10.2026)

திருமண அழைப்பிதழ்



மணமகள் வீட்டார்

Dr.A.கார்த்திகேயன்– M.சரோஜா
அவர்களின் மூத்த குமாரத்தி
திருவளர்ச்செல்வி
K.S.**காயத்ரி தேவி**, MCA.,
(HCL Tech,Chennai)
என்கிற கன்னிகைக்கும்

மணமகன் வீட்டார்

திரு Dr.S.ராஜேஸ்வரன் – திருமதி R.விஜி
தம்பதியரின் மூத்த குமாரன்
திருவளர்ச்செல்வன்
R.**சதிஷ் பாலாஜி**, BE., PGDM.,
(Bharati Airtel, Chennai)
என்கிற வரனுக்கும்

திருமணம் செய்ய பெரியவர்களால் நிச்சயித்த வண்ணம் மங்களகரமான தமிழ் பராபவ வருடம் கார்த்திகை மாதம் 4ம் தேதி (20.11.2026) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு மேல் 7.30 மணிக்குள், சென்னை–117, பல்லாவரம், பெருமாள் நகர், 200 அடி ரேடியல் ரோடு, பல்லாவரம் – துரைப்பாக்கம் நெடுஞ்சாலை, எண்.90 அமைந்துள்ள **அருள் முருகன் டவர்ஸ் ஜெயலட்சுமி ஆஞ்சநேயர் மஹால் திருமண மண்டபத்தில்** நடைபெறுவதால் தாங்கள் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளும்படி அன்புடன் அழைக்கின்றோம்

மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது...

தங்கள் அன்புள்ள
Dr.A.கார்த்திகேயன் M.E., Ph.D.,
EE / Oper./ 230KV Madambakkam Sipcot SS,
M.சரோஜா MCS.,M.Sc.(YHE)
திருவஞ்சேரி, சென்னை – 126
செல்: 80728 86250 / 99529 37546

பொர். A. கார்த்திகேயன், EE / TNEB, அவர்கள்
மின்அலை நன்கொடையாக ரூபாய். 1501/– அளித்துள்ளார், நன்றி

Firm buying power from third parties may face 63 paise surcharge

Chennai: The Tamil Nadu Power Distribution Corporation Ltd (TNPDCL) has proposed an additional surcharge of 63 paise per unit on high-tension (HT) consumers procuring electricity through open access for the six months from Oct 1, 2026 to March 31.

The proposal, placed before the Tamil Nadu Electricity Regulatory Commission (TNERC), is based on the distribution utility's claim that it bears fixed costs under existing power purchase agreements even when consumers meet their electricity requirements from sources outside the utility.

TNPDCL has estimated the net stranded cost attributable to open access consumers at ₹180.91 crore for the assessment period of Oct 2025 to March 2026. Based on an adjusted open access consumption of 2,891.13 million units, it worked out the additional surcharge at ₹0.63 per unit.

The utility said open access had led to a portion of its contracted capacity remaining unutilised even though it continued to incur fixed costs. During the assessment period, the average allowed open access capacity was 712.25 MW, while the capacity considered stranded was 486.76 MW.

TNPDCL has calculated its overall fixed cost at ₹8,795.15 crore, of which ₹384.18 crore was attributed to the stranded capacity. After factoring in transmission and distribution charges already recovered from open access consumers, the net stranded amount was worked out at ₹180.91 crore. The power discom had informed TNERC that ₹282.64 crore relating to stranded costs for Oct 2025-March 2026 remained unrecovered, pending disposal of its earlier petition. It has sought an early decision on that petition. It has sought an early decision on that plea.

TNPDCL has invited comments and suggestions from stakeholders on the latest petition. Submissions can be made to the chief financial controller, Regulatory Cell, TNPDCL, or by email to cfcregcell@gmail.com. The deadline for filing comments is Oct 8.

Thanks : The Times of India (27.09.2026)

WEDDING INVITATION

with the blessing of our families, we

AYUSHI & ADITHYA

INVITE YOU TO CELEBRATE OUR WEDDING



RECEPTION
29 TH OCT 2026
THURSDAY / 7.00 PM

MUTHUTHAM
30TH OCT 2026
FRIDAY / 9.00 AM

SRI VELAN MAHAL
ERODE, TAMIL NADU

HIS FAMILY
REVATHI & SRINIVASAN
ERODE, TAMIL NADU

HER FAMILY
PREETI & AKHILESH
VARANASI, UTTAR PRADESH

YOUR PRESENCE WILL MAKE OUR CELEBRATION COMPLETE

மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது...

பொர். N. சீனிவாசன், AEE Safty Karur Region, கிளைத் தலைவர் / கரூர்
அவர்கள் மின்அலை நன்கொடையாக ரூபாய். 1001/– அளித்துள்ளார், நன்றி

தணியாத தேவையின் காரணமாக, தமிழ்நாடு ஒரு யூனிட் மின்சாரத்தை வரலாறு காணாத விலையான ரூ.37-க்கு வாங்குகிறது.

தேவைக்கும் கையிருப்புக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக, அந்தப் பயன்பாட்டு நிறுவனம் திறந்த சந்தையிலிருந்து குறுகியகால கொள்முதல்களை ஆராய்ந்து வருகிறது. அதிகாரியின் கூற்றுப்படி, மின்சார நிறுவனம் அக்டோபர் 12 நள்ளிரவு முதல் அக்டோபர் 31 அதிகாலை 2 மணிவரை ஒரு யூனிட் ரூ.31.99 முதல் ரூ.34.49 வரையிலான விலையில் 2,062 மெகாவாட் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யும். மாலை நேர உச்சபட்ச தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அக்டோபர் 12 மாலை 6 மணிமுதல் அக்டோபர் 31 நள்ளிரவு வரைமேலும் 2,001 மெகாவாட் மின்சாரம் ரூ.33.37 முதல் ரூ.37 வரையிலான விலையில் கொள்முதல் செய்யப்படும்.

அக்டோபர் மாதத்திலும் மாநிலம் முழுவதும் மின்சாரத் தேவை அதிகமாக உள்ள நிலையில், தமிழ்நாடு மின்சார விநியோகக் கழகம் (டி.என்.பி.டி.சி.எல்), எரிவாயு ஆலைகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் 181 மெகாவாட் மின்சாரத்தை, அக்டோபர் 31 வரை ஒரு யூனிட்டுக்கு ரூ.37 என்ற வரலாறு காணாத அதிக விலையில் கொள்முதல் செய்துவருகிறது. இதுவரையில் அந்தமின் விநியோக நிறுவனம் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யும் விலையிலேயே இது மிக அதிகமானது.

சமீபத்தில் உச்சநேரங்களில் ஏற்படும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, திறந்த சந்தையிலிருந்து 4,500 மெகாவாட் மின்சாரத்தை அவசரமாகக் கொள்முதல் செய்ய மின்–டெண்டர்களை வெளியிட்டதாக TNPDCL–இன்மூத்த அதிகாரி ஒருவர் TNIE–யிடம் தெரிவித்தார். "இருப்பினும், எங்களால் அனல் மின்சாரத்தை மலிவான விலையில் கொள்முதல் செய்ய முடியவில்லை. எரிவாயு அடிப்படையிலான மின்உற்பத்தி நிலையங்கள் தேவையான மின்சாரத்தை வழங்கத் தயாராக உள்ளன, ஆனால் அதன் விலை அதிகமாக உள்ளது," என்று அந்த அதிகாரி கூறினார்.

அதிக விலையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கான காரணங்களை விளக்கிய அந்த அதிகாரி, ஒப்பந்தங்களின் படி, அனல்மின் நிலையங்களிடமிருந்து மின்சாரத்தை வாங்கினாலும் வாங்காவிட்டாலும், பயன்பாட்டு நிறுவனம் ஒரு நிலையான கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது என்றார். இதற்கு மாறாக, எரிவாயு அடிப்படையிலான மின்நிலையங்கள் அதிக நெகிழ்வுத் தன்மையை வழங்குகின்றன, ஏனெனில் பயன்பாட்டு நிறுவனம் மின்சாரத்தை வாங்க வேண்டாம் என்று முடிவு செய்தால், ஒரு யூனிட்டுக்கு ரூ.1 என்ற பெயரளவிலான நிலையான கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதும்.

அதிகாரியின் கூற்றுப்படி, மின்சார நிறுவனம் அக்டோபர் 12 நள்ளிரவு முதல் அக்டோபர் 31 அதிகாலை 2 மணி வரை ஒரு யூனிட் ரூ.31.99 முதல் ரூ.34.49 வரையிலான விலையில் 2,062 மெகாவாட் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யும். மாலை நேர உச்சபட்ச தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அக்டோபர் 12 மாலை 6 மணி முதல் அக்டோபர் 31 நள்ளிரவு வரை மேலும் 2,001 மெகாவாட் மின்சாரம் ரூ.33.37 முதல் ரூ.37 வரையிலான விலையில் கொள்முதல் செய்யப்படும்.

Thanks.. - The New Indian Express (13 Oct 2026)

மின் கணக்கீட்டுப் பணி: அரசு வேலையாகவே தொடரட்டும்!

மின் கட்டணக் கணக்கீட்டுப் பணிகளைத் தனியார் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளும் தமிழக அரசின் முடிவுக்கு எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. துல்லியமான கணக்கீட்டுக்கு இது வழிவகுக்கும் என்று காரணம் கூறப்பட்டாலும், இதன் மூலமாக நிரந்தர வேலைவாய்ப்பு பறிபோவதோடு முறைகேடுகளும் தவறுகளும் நிகழ சாத்தியம் இருப்பதாகவும் விமர்சிக்கப்படுகிறது.

தமிழகத்தில் மின் கணக்கீட்டாளர்களைத் தனியார் நிறுவனங்கள் மூலம் 6 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்ய முடிவெடுத்துள்ளதாகவும் அக்டோபர் முதல் அதற்கான பணிகள் தொடங்கும் எனவும் தமிழ்நாடு மின்சார வாரியம் அண்மையில் அறிவித்தது. துல்லியமான கணக்கீடு தொடர்பான புகார்களில் நுகர்வோருக்குத் தீர்வு வழங்கவும் பணியாளர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும் உதவுகிற தற்காலிக நடவடிக்கையே இது என்றும் கூறப்பட்டது. ஆனால், இது தனியார்மயமாக்கலுக்கும் மின்கட்டண உயர்வுக்கும் வழிவகுக்கும் என்று எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

Thanks..The Hindu Tamil Thisai (02.10.2026)

தொழிற்பழகுநர் பயிற்சி வாரியம் (தென் மண்டலம்), சென்னை - 113.

தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் லிமிடெட் (TNDCL) நிறுவனத்தில் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சிக்காக, 2022, 2023, 2024, 2025 மற்றும் மே 2026-ல் தேர்ச்சி பெற்ற, தமிழ்நாட்டைச் சேர்ந்த பொறியியல் டிப்ளமோ (EEE / ECE / CSE / IT) படித்தவர்களிடமிருந்து இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு 28.10.2026 முதல் கிடைக்கும்: https://nats.education.gov.in/boat-srp.php மாணவர்கள் கீழ்க்காணும் இணையதளம் வழியாகப் பதிவு செய்து விண்ணப்பிக்கலாம். https://nats.education.gov.in இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள்: 28.11.2026

செ.ம.தொ.இ/3186/ஒப்பந்தப்புள்ளி/2026

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு

தினத்தந்தி 22.10.2026

Tenders floated to install 1.77 crore smart meters in Tamil Nadu

CHENNAI: The Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL) has floated e-tenders in seven packages for the installation of 1.77 crore smart meters across municipal corporation areas under the centre's Revamped Distribution Sector Scheme (RDSS).

The tenders seek to appoint Advanced Metering Infrastructure Service Providers (AMISP) under the Total Expenditure (TOTEX) model. The smart meters will cover all low-tension (LT) consumers, except government buildings, agricultural and hut services.

According to a senior TNPDCL official, the Chennai region has been divided into two packages, while the remaining 23 municipal corporations have been grouped into five packages.

"Six corporations including Kancheepuram, Villupuram, Vellore and Tiruvannamalai will form one package, while five corporations including Erode and Karur will form another. Tiruchy and Thanjavur will constitute another package, while Madurai and Tirunelveli will form one more package," the official told TNIE.

In the Chennai region, 56.85 lakh smart meters are proposed to be installed. Around 1.29 lakh smart meters have already been installed in T Nagar under the Smart City Mission.

During the TVK's first budget session in the Assembly, Finance Minister N Marie Wilson announced that the entire Chennai Metropolitan area, comprising around 38.8 lakh LT services, would be brought under smart metering. However, the official said the project's scope has now expanded to cover all municipal corporations in the state.

TNPDCL has also floated a separate tender for the installation of 4.72 lakh smart meters at distribution transformers. These meters are expected to help the discom monitor energy flow, identify technical and commercial losses and detect possible instances of power theft.

The smart-metering programme has gone through several rounds of tendering. The first tender was floated in August 2023 to cover all three crore electricity consumers in the state. It was cancelled in December 2024 after receiving poor response from bidders and amid concerns over the high maintenance costs quoted by them.

Fresh tenders were issued in March 2025 and subsequently revised in August to cover 1.44 crore consumers consuming more than 400 units every two months in the first phase. However, the revised tender was also cancelled later.

Now, the TVK government floated tenders for smart meter installation again. As per union government norms, the entire installation process should be completed by March 2028.

Thanks : The New Indian Express {08.10.2026}

கண்ணீர் அஞ்சலி

பொறியாளர்கள்

1. 04.10.2026 அன்று **பொர். ஜெயபாரதி,** உதவி மின் பொறியாளர் / செஞ்சி நகரம், விழுப்புரம் கிளை அவர்கள் 89735 55260.

பொறியாளர்களின் மறைவிற்கு பொறியாளர் சங்கம் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளர்களை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது

பொறியாளர் குடும்பத்தினர்கள்

1. 11.10.2026 அன்று **பொர். உமாபதி,** உதவி மின்பொறியாளர், பொன்னகரம் / திண்டுக்கல், திண்டுக்கல் கிளை அவர்களின் **தாயார்** 95006 02880.
2. 11.10.2026 அன்று **பொர்.** K. V. **ரகுநாதன்,** AEE / Spl. Mtce. / Gobi, Gobi Branch, அவர்களின் தந்தையார் 9443762390.
3. 12.10.2026 அன்று **பொர்.** M. **விவேக்குமார்,** பொறியாளர் / நீடூர் பிரிவு, மயிலாடுதுறை கோட்ட செயலாளர், அவர்களின் **தகப்பனார்.** 80725 88498.
4. 23.10.2026 அன்று **பொர்.** S.**கவிதா,** இளமின் பொறியாளர் / இ & ப / ராஜாஜி நகர், சென்னை வடக்கு கிளை அவர்களின் **தாயார்.** 97890 74913

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.



தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய தலைவராக பொறுப்பேற்றுள்ள மரியாதைக்குரிய Dr.J.ராதாகிருஷ்ணன் I.A.S மற்றும் ஆணைய உறுப்பினராக பொறுப்பேற்றுள்ள பொறிஞர் A.R. மஸ்கர்னஸ் அவர்களையும் 16.10.2026 அன்று சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

MIN ALAI - October 2026 RNI No. TNBIL / 2012 / 47622
Printed Book Periodical



Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam